செய்தி வெளியீடு எண்: 781 நாள்: 09.11.2019

## செய்தி வெளியீடு

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

### நிதி அறிக்கை – 2ஆம் காலாண்டு – 2019–20

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 30.09.2019 உடன் முடிந்த இரண்டாம் காலாண்டில் கிடைத்த வருவாய் ரூ. 783.89 கோடியாகும். சென்ற ஆண்டு இதே காலாண்டில் கிடைத்த வருவாய் ரூ. 1014.07 கோடியாகும். வரிக்கு முந்தைய இலாபம் ரூ. 33.42 கோடி ஆகும். சென்ற ஆண்டு இதே காலாண்டில் வரிக்கு முந்தைய இலாபம் ரூ. 10.15 கோடியாக இருந்தது.

30.09.2019 அன்றுடன் முடிவடைந்த இரண்டாம் காலாண்டின் வரிக்கு பிந்தைய இலாபம் ரூ. 21.58 கோடியாகும். சென்ற ஆண்டு இதே காலாண்டில் வரிக்கு பிந்தைய இலாபம் ரூ.6.52 கோடியாக இருந்தது. தேய்மானத்திற்காக ரூ. 57.64 கோடியும், நிதி செலவுகளுக்காக ரூ. 52.99 கோடியும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

30.09.2019 உடன் முடிந்த அரையாண்டில் கிடைத்த வருவாய் ரூ. 1744.52 கோடியாகும். சென்ற ஆண்டு இதே அரையாண்டில் வருவாய் ரூ. 1949.31 கோடியாகும். வரிக்கு முந்தைய இலாபமாக ரூ. 147.70 கோடியும், சென்ற ஆண்டு இதே அரையாண்டில் ரூ. 48.99 கோடி இலாபமாக இருந்தது.

30.09.2019 அன்றுடன் முடிவடைந்த அரையாண்டில் வரிக்கு பிந்தைய இலாபமாக ரூ. 98.67 கோடியாகவும், சென்ற ஆண்டு இதே அரையாண்டில் வரிக்கு பிந்தைய இலாபமாக ரூ. 31.21 கோடி இருந்தது. தேய்மானத்திற்காக ரூ. 114.73 கோடியும், நிதி செலவுகளுக்காக ரூ. 107.38 கோடியும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

30.09.2019 அன்றுடன் முடிவடைந்த இரண்டாம் காலாண்டின் காகித உற்பத்தி 108752 மெட்ரிக் டன் ஆகும். சென்ற ஆண்டு இதே காலாண்டில் காகித உற்பத்தி 106749 மெட்ரிக் டன் ஆகும். காகித அட்டையின் உற்பத்தி இந்த காலாண்டில் 42516 மெட்ரிக் டன் ஆகும். சென்ற ஆண்டு இதே காலாண்டில் 47487 மெட்ரிக் டன் ஆகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**